பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

11 01 2025 7 15
சனிக்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள் -</u>

1. போதைப்பொருள் புழக்கத்திற்கு எதிராக மத்திய அரசு கடும் நடவடிக்கை எடுத்து வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா கூறியுள்ளார்.
2. பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதியின் மையமாக இந்தியா திகழ்வதாக பாதுகாப்புத்துறை தெரிவித்துள்ளது.
3. நடப்பு ஆண்டு ஹஜ் பயணத்திற்காக மூவாயிரத்து 676 விண்ணப்பதாரர்களுக்கு தற்காலிக இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக மத்திய சிறுபான்மையினர் நல அமைச்சகம் தெரிவித்துள்ளது.
4. தில்லி மதுபான கொள்கை முறைகேடு மூலம் இரண்டாயிரம் கோடி ரூபாய்கும் கூடுதலாக வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக பிஜேபி குற்றம்சாட்டியுள்ளது.
5. ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெற்ற பெங்களூரு அணிக்கு எதிரான ஆட்டத்தில் முகமதன் அணி வெற்றிபெற்றது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

**[]<<<>>>[]**

போதைப்பொருள் புழக்கத்திற்கு எதிராக மத்திய அரசு கடும் நடவடிக்கை எடுத்து வருவதாக உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற தேசிய பாதுகாப்பு மற்றும் போதைப்பொருள் தடுப்பு குறித்த மாநாட்டில் அவர் உரையாற்றினார்.

நாடு முழுவதும் கடந்த பத்து ஆண்டுகளில் 56 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு மட்டும் 16 ஆயிரத்து தொள்ளாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

போதைப்பொருள் புழக்கத்திற்கு எதிராக காவல்துறை மற்றும் போதைப்பொருள் தடுப்பு அமைப்பு ஆகியவை கடும் நடவடிக்கை எடுத்து வருவதாக அவர் தெரிவித்தார்.

இதற்கான நடவடிக்கைகளை அனைத்து மாநில அரசுகளும். மத்திய அரசுடன் இணைந்து மேற்கொள்ள வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார்.

இக்கூட்டத்திற்கு இடையே போதைப்பொருளை அழிப்பதற்கான இருவார கால இயக்கத்தை திரு அமித்ஷா தொடங்கி வைத்தார்.

இம்மாதம் 25-ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இந்த இயக்கத்தின்போது 44 ஆயிரம் கிலோ போதைப்பொருள் அழிக்கப்பட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

தூய்மை தொழில்நுட்ப உற்பத்திக்கான தளத்தை மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறைஅமைச்சர் திரு பியூஷ் கோயல் இன்று தொடங்கி வைத்தார்.

சூரியசக்தி காற்றாலை, ஹைட்ரஜன் மற்றும் மின்கலன்கள் ஆகியவற்றின் செயல் திறனை உயர்த்துவதற்கும், காற்று மாசு ஏற்படுத்தாத வகையில் உற்பத்தி தொழில்நுட்பங்களை கொண்டு வருவதற்கும் இந்த தளம் உதவிடும் என்று அவர் தெரிவித்தார்.

நீடித்த வளர்ச்சிக்கான புதிய தொழில்நுட்பங்களை கொண்டு வருவதில் இந்தியா முன்னோடியாக திகழ்வதற்கு இந்த தூய்மை தொழில்நுட்ப உற்பத்தித் தளம் உதவிடும் என்று அவர் கூறினார்.

உற்பத்தியோடு இணைந்த சலுகை திட்டங்கள் மற்றும் மானியங்கள் தூய்மை எரிசக்தித்துறையின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் என்றும் திரு பியூஷ் கோயல் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தில்லி மதுபான கொள்கை முறைகேடு மூலம் இரண்டாயிரம் கோடி ரூபாய்கும் கூடுதலாக வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக தலைமை கணக்கு தணிக்கை அதிகாரியின் அறிக்கையின் மூலம் தெரிய வந்துள்ளதாக பிஜேபி தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் கட்சியின் தலைமையகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திரு அனுராக்தாக்கூர், மதுபான கொள்கை முறைகேட்டில் ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு முக்கிய பங்கு உள்ளதாகக் குற்றம்சாட்டினார்.

தில்லியில் சேதமடைந்த சாலைகள், சுகாதாரமற்ற குடிநீர், மின் கட்டண உயர்வு உள்ளிட்ட பிரச்சினைகள் குறித்து ஆம் ஆத்மி அரசு உரிய பதிலளிக்கவில்லை என்று திரு அனுராக் தாக்கூர் தெரிவித்தார்.

இதற்கிடையே பிஜேபி-யின் குற்றச்சாட்டை மறுத்துள்ள ஆம் ஆத்மி கட்சியின் தலைவர்களில் ஒருவரான பிரியங்கா காக்கர், தலைமை கணக்கு தணிக்கை அதிகாரியின் அறிக்கை வெளியிடப்பட்டது போலியானது என்று தெரிவித்தார்.

இந்த முறைகேட்டில் திரு கெஜ்ரிவாலுக்கு தொடர்பு உள்ளதாக எந்த ஆதாரமும் இல்லை என்று அவர் கூறினார்.

**[]<<<>>>[]**

தில்லியில் ஆம் ஆத்மி சட்டப்பேரவை உறுப்பினர்கள் இரண்டு பேரின் கையெழுத்து மற்றும் போலியான ஆதார் அட்டை மூலம் பங்ளாதேஷ் நாட்டைச் சேர்ந்தவர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரிய வந்துள்ளதாக பிஜேபி குற்றம்சாட்டியுள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் செய்தி தொடர்பாளர் திரு சுதான்ஷு திரிவேதி, இதன்மூலம் ஆம் ஆத்மி தேசவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக குற்றம்சாட்டினார்.

இதற்கிடையே இந்த குற்றச்சாட்டை மறுத்துள்ள ஆம் ஆத்மி கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் திரு சஞ்ஜய் சிங், போலியான வாக்குகளை செலுத்த பிஜேபி முயற்சித்து வருவதாகக் குறை கூறினார்.

**[]<<<>>>[]**

பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதியின் மையமாக இந்தியா திகழ்வதாக அத்துறைக்கான துணைத் தலைமை இயக்குநர் திரு அகிலேஷ் குமார் மிஸ்ரா தெரிவித்துள்ளார்.

அகர்தலாவில் நடைபெற்ற இந்திய வர்த்தக சபைக் கூட்டத்தில் உரையாற்றிய அவர், அமெரிக்கா, பிரான்ஸ், அர்மீனியா உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதி செய்யப்படுவதாகக் கூறினார்.

பாதுகாப்பு தளவாடங்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதில் 16 பொதுத்துறை நிறுவனங்கள் ஈடுபட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.,

கடந்த நிதி ஆண்டில் ஒரு லட்சத்து 27 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு பாதுகாப்பு தளவாடங்கள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டதாக அவர் கூறினார்.

இதில் 21 சதவீதம் அளவிற்கு தனியார் துறையினரின் பங்களிப்பு உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

நடப்பு ஆண்டில் ஒரு லட்சத்து 75 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு பாதுகாப்பு தளவாடங்களை உற்பத்திய செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் திரு அகிலேஷ் குமார் மிஸ்ரா தெரிவித்தார்.

[]<<<>>>[]

நடப்பு ஆண்டு ஹஜ் பயணத்திற்கான பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த மூவாயிரத்து 676 விண்ணப்பதாரர்களுக்கு தற்காலிக இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாக மத்திய சிறுபான்மையினர் நல அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஹஜ் பயணத்துக்கான இரண்டாவது காத்திருப்பு பட்டியலை இந்திய ஹஜ் கமிட்டி வெளியிட்டுள்ளது.

இம்மாத 23-ஆம் தேதிக்கு முன்பாக இரண்டு லட்சத்து 72 ஆயிரத்து 300 ரூபாய் செலுத்தப்பட வேண்டுமென்று ஹஜ் விண்ணப்பதாரர்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

அத்துடன் தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்குமாறும் தெரிவித்துள்ளது.

நடப்பு ஆண்டு ஒரு லட்சத்து 22 ஆயிரம் யாத்ரிகர்கள் ஹஜ் பயணம் மேற்கொள்ள உள்ளதாக ஹஜ் கமிட்டி தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

தமிழகத்தில் பொங்கல் பண்டிகை கொண்டாட்டங்கள் களைகட்ட தொடங்கியுள்ளன.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கல்லூரிகளிலும், இதர இடங்களில் அனைவரும் ஒருங்கிணைந்து சமத்துவ பொங்கலை கொண்டாடி வருகின்றனர்.

சென்னையை அடுத்த கொளத்தூரில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில் தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கலந்து கொண்டார்.

அப்போது பொங்கல் நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு அவர் வழங்கினார்.

இதற்கிடையே நாகை மாவட்டம் புத்தூரில் சுற்றுலாத்துறை சார்பில் சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது.

இதில் கல்லூரி மாணவர்கள் ஏராளமனோர் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - செ ஜெ ) ---- 39 செகண்ட்*

[]<<<>>>[]

வெளிநாடுவாழ் தமிழர்களின் நலனுக்காக மாநில அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருவதாக துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற அயலக தமிழர் தினத்தையொட்டி அமைக்கப்பட்ட கண்காட்சியை திறந்து வைத்து பேசிய அவர், வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்களுக்கு ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டால் உடனடியாக களததில் இறங்கி மீட்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாகக் கூறினார்.

வெளிநாடுகளில் தமிழ்மொழி மற்றும் தமிழர்களின் நலனுக்காக பாடுபடுவோருக்கு அரசு சார்பில் விருதுகள் வழங்கி கௌரவிக்கப் படுவதாகவும் திரு உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் மதுரை – தூத்துக்குடி ரயில்வே திட்டத்தை கைவிடுமாறு தமிழக அரசு ஒருபோதும் கூறவில்லை என்று மாநில போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சிவசங்கர் தெரிவித்துள்ளார்.,

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இத்திட்டத்தை கைவிட தமிழக அரசு கோரியதாகவும், அதனால் இந்த திட்டம் கைவிடப்பட்டதாகவும் வெளியான செய்தி உண்மைக்கு புறம்பானது என்று கூறியுள்ளார்.

மாறாக இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தவே மாநில அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தை கைவிடக்கோரி கடிதம் மூலமாகவோ, வாய்மொழியாகவோ தமிழக அரசால் ரயில்வேத் துறைக்கு தெரிவிக்கப்படவில்லை என்றும் திரு சிவசங்கர் அந்த செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் இன்று நடைபெற்ற பெங்களூரு அணிக்கு எதிரான ஆட்டத்தில் ஒன்று – பூஜ்ஜியம் என்ற கோல் கணக்கில் முகமதன் அணி வெற்றிபெற்றது.

இன்னும் சற்று நேரத்தில் தொடங்க உள்ள மற்றொரு ஆட்டத்தில் மோகன்பெஹான் அணி – ஈஸ்ட் பெங்கால் அணியை எதிர்கொள்கிறது.